மாபெரும் இன்னிசைவிழா
அருள்இசைமுரசு
நாகூர்
E. M. ஹனிபாவின்
இசைக்கச்சேரி
17-02-80 ஞாயிறுமாலை
ஜின்னு மைதானம்
அனைவரும் வருக,
பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.



ஈழநாடு The EELANAADU
50 சதம்
யாழ்ப்பாணம் மாசி 2 ரபி-அவ் 26 இதழ் 4
வியாழக்கிழமை 14-2-80

PERIODICALS DIVISION LIBRARY

தாராளமாக
கிடைக்கின்றன.
HONDA
மோட்டார்சைக்கிள்கள்
C 70
C 90
C 125
வேண்டிய
வர்ணங்களில்
உடன் கிடைக்கும்.
பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்; 685.

### டாக்டர்கள் விவகாரம் தொடர்பாக

# அவசிய சேவைகள் சட்டத்தை அமுல்செய்யவேண்டியதில்லை

## அமைச்சரவையின் முடிவு

(கொழும்பு)

**அநேகமான வைத்தியசாலைகளில் வேலைக்கு வராதிருந்த வைத்தியர்கள் நேற்று வேலைக்குச் சமுகமளித்திருந்தார்கள் எனத் தெரிய வருகிறது. வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த பலர் வேலைக்கு வராமலிருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.**

**எனினும் இவர்கள் இப்பொழுது வேலைக்குத் திரும்பியதால் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை அமுல் செய்யத் தேவையில்லை என்று அங்கு கருதப்பட்டது.**

கடந்த சில தினங்களாக அரசாங்க வைத்தியர்கள் 'திடீர் லீவு' போட்டுவிட்டு வீட்டில் நின்றமையால் ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குட்பட்டனர்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சுகாதார சேவைகள் அமைச்சர் திரு. ரஞ்சித் அத்தப்பத்து நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து ஆபத்துக்கட்டத்தில் திடீர்ச் சேவையிலிறங்கியமை குறிப்பிடத்தக்கது.

டாக்டர்களது லீவுநடவடிக்கைகள் நாட்டின் பல பாகங்களிலும் திடீரெனப் பரவியதால் அரசாங்கம் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தீர்மானித்தது. ஆனால் தற்பொழுது டாக்டர்கள் தமது கடமைகளில் ஈடுபட்டிருப்பதால் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை அமுல் செய்யத் தேவையில்லை என்று அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்டுள்ளது. டாக்டர்களது நடவடிக்கைகளால் பலத்த சிக்கல்கள் தோன்றலாமென்று எதிர்பார்த்திருந்ததாலேயே அரசாங்கம் மேற்குறிப்பிட்ட சட்டத்தை அமுல் செய்யத்தீர்மானித்திருந்தது. தற்பொழுது பேச்சுவார்த்தைகளின் பின்னரேயே சுமுகமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

பரந்தளவில் 'அத்தியாவசிய சேவைகள்' சட்டத்தின் மூலம் மேற்கொள்ளவிருந்த நடவடிக்கைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன என்றும் அறி

(8-ம் பக்கம் பார்க்க)

### பஸ்நிலையத்தில் நின்றவருக்கு:

## நீதவான் முன்னிலையில். கதறக்கதற 6 பிரம்படி!

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் அவசியமின்றி காணப்பட்ட இளைஞருக்கு யாழ். மேலதிக நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் "ஐயோ, ஐயோ" என்று கதறக்கதற 6பிரம்படி வழங்கப்பட்டது.

மண்டைதீவைச் சேர்ந்த வீரசிங்கம் பரமேஸ்வரன் என்ற இளைஞர் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது 'எதற்காக அங்கு நின்றீர்' என நீதவான்கேட்டதும் படம்பார்க்க வந்ததாகக் கூறினர்.

வயது எத்தனையெனக் கேட்டபோது 14வயது என்று கூறினர். எந்த வருடம்பிறந்ததாக நீதவான் கேட்டபோது அவர் பதிலளிக்கவில்லை.

நான் ஒரு மாலை கட்டுபவர் என்றும் படம் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்ததாகவும் அவ்விளைஞர்கூறினர்.

நீதிமன்றத்தில் பகிரங்கமாக 6 பிரம்படிவழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டதைத்தொடர்ந்து வாங்கொன்றில் குப்புறக் கிடக்க வைத்து கால்களை ஒருவர் பிடிக்க நீதிமன்ற சார்ஜன் அன்ரன், நீதவான் முன்னிலையில் கதறக்கதற 6 பிரம்படி வழங்கினர். (க)

## விஞ்ஞான பட்டதாரி ஆசிரியருக்கு விசேட அலவன்ஸ்

[கொழும்பு]

விஞ்ஞானச் சிறப்புப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு200 ரூபாவையும் விஞ்ஞானப் பொதுப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 150 ரூபாவையும் விசேட அலவன்ஸ்ஸாக வழங்க மந்திரி சபை தீர்மானித்துள்ளது.

இவ்விசேட அலவன்ஸ் ஓய்வூதியத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாதெனத் தெரிய வருகிறது.

நேற்றுக்கூடிய அமைச்சரவை நிறைவேற்றிய மற்றுமோர் தீர்மானத்தின்படி 366 பெருந்தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள்.

பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு கல்வியமைச்சிற்கு 30 லட்சம் ரூபாவை ஒதுக்குவதென்றும் மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

எந்த ஒரு பாரளுமன்ற உறுப்பினராவது / பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பாவித்து எவர்மீதாவது குற்றம் சுமத்தி அது தவறானதெனக்கண்டு அதனை வாபஸ் பெறும்படி சபாநாயகர் கூறினால் அந்தக் குறிப்பிட்ட பகுதியை ஹன்சாட்டிலிருந்து முற்றாக நீக்குவதற்கு ஏற்ற விதத்திலே பாராளுமன்ற நிரந்தரச்சட்டத்தை [illegible] துவதென்றும் மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

குறிப்பிட்ட குற்றச்சாட்டு சம்பந்தமாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தால் அதற்கு அப்பத்திரிகைகளே பொறுப்பாகும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கச் சிறப்புரிமையைப் பாவித்துத் தொழிற்சங்க வாதிகள் சட்டங்களை மீற முடியாதென்று ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன இக்கூட்டத்தில் சுட்டிக் காட்டினர்.

அண்மையில் காலஞ்சென்ற முன்னள் கலாச்சார அமைச்சர் ரி. பி, தென்னக்கூனின் குடும்பத்திற்கு25,000 ரூபாவை வழங்குவதெனவும் மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

## மந்திரி சபையில் மாற்றம்

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற மந்திரி சபைக்கூட்டத்தில் பின்வருவோர் அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்களதும் அமைச்சுக்களதும் விபரம் வருமாறு:-

திரு. மொண்டேகு ஜயவிக்கிரம பொதுநிர்வாக தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்; திரு. நிஸங்க விஜயரத்ன - நீதியமைச்சர்; ரணில் விக்கிரமசிங்கா கல்வி; உயர்கல்வி அமைச்சு ஜனாதிபதி பொறுப்பில் இருக்கும். ஊர்ஜிதம் செய்யப்பட்ட அமைச்சுப் பதவிகளில் இவர்கள் இன்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வார்கள் எனத் தெரியவருகின்றது. [நா]

### யாழ். நகர் கொள்ளை:

## ஐவர் கைது நாளை

## அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நாளை யாழ் நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கொள்ளை தொடர்பாக சந்தேக நபர்களான ச. இம்மானுவேல், அ. பிலிப் ஆகியோர் யாழ் மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது, அவர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.

கடந்த மாதம் 9-ம் தேதி இரவு 10 மணிக்கு யாழ் பிரதான வீதியில் முகமட் பஷிர் என்பவர், என். எம். முனைய் புடன், ஈ. வை. 9913 காரில் சென்றுகொண்டிருந்த சமயம் இனந்தெரியாத 6 பேர் காரை மறித்து பஷிருக்கு அடித்து 9700 ரூபா பெறுமதியான சங்கிலி கைக்கடிகாரத்தை பறித்து கொண்டு ஓடிவிட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இப்புகாரைத் தொடர்ந்து விசாரணை நடத்திய பொலிசார் சந்தேக நபர்களான

(8-ம் பக்கம் பார்க்க)

## ரெலிவிஷனில் சூரியகிரகணம்

சென்னை, பெப். 13

ரெலிவிஷன் செட் வைத்திருப்பவர்கள் அதில் சூரிய கிரகணத்தைக் காணலாம்.

கிரகணம் ஏற்படும் நேரத்தில் அவ்வப்போது ரெலிவிஷன் கமராக்கள் சூரியனை நோக்கித் திருப்பப்படுமென்றும் பார்வையாளர்கள் சூரிய கிரகணத்தை ரெலிவிஷனில் காணலாமென்றும் இதன் காரணமாக கண்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்தைத்தடுக்கலாமென்றும் இந்திய மத்திய அமைச்சர் திரு. சமத்தே தெரிவித்தார். (நா)

தேர்தல் போட்டியில் பரிசுபெற்றோருக்கு வாழ்த்துக்கள்
யாழ் நகர மக்களுக்கு ஓர் நற்செய்தி!
★ புத்தம்புதிய HONDA
மோட்டார் சைக்கிள்கள்
விற்பனைக்குண்டு.
● பிரசித்திபெற்ற முழு உருக்கிலான
VENUS பைசிக்கிள்கள்
உபஉறுப்புகள் உட்பட.
விலை ரூபா - 795/- மட்டுமே.
அப்துல்லா அன் கோ.,
127, 129, கே, கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7570
"An Only Place in Jaffna To Purchase A Brand New HONDA Motor Cycle"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இராசபாதையில் 5 பரப்புத் தோட்டக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில். செல்வி ஞா. நவரத்தினம், பழைய தெரு, கோப்பாய் தெற்கு. 4948

## விற்பனைக்கு

4½ கன அடி சுற்றளவும் 12 அடி நீளமான இரண்டு அரிந்த வேம்புகள் விற்பனைக்குண்டு. 26, முருகேசர் ஒழுங்கை நல்லூர், யாழ்ப்பாணம். 4954

## தவறிவிட்டது

கருங்காலியாலான சித்திர வேலைப்பாடமைந்த ஆனை முகம் கொண்ட ஊன்றுகோல் (வாக்கிங் ஸ்டிக்) காங்கேசன் துறைச் சந்திக்கும் கட்டுவன் சந்திக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கா. ஆறுமுகம் பிள்ளை, குரும்பசிட்டி ரோட், கட்டுவன், தெல்லிப்பளை என்ற விலாசத்தில் ஒப்படைத்தால், தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4958

## WANTED

Wanted distributors or Agents to distributes oul Products (Confectionerys & Toys) in Northern Province. For details contact or appyr to Kanna, Products, Chunna. kam on or before 23rd Feb. 1980. 4933

## 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 13-10-53
மறைவு 16-2-78

16-2-78 - ல் காலமான எம். செல்வப் புதல்வன் மத்தியூஸ் அவர்களின் ஆத்தும சாந்திக்காக சு. ம. தி அண்மையில் பிரான்சிஸ் டானியல் அவர்களால் துக்கப்பாடல் ஆராதனைகள் நடைபெறும். இப்பூசைக்கு சேமக்காலையில் இடம் எடுத்துதந்த அரசினர் வைத்தியசாலையில் வேலை செய்யும் திரு. P. எட்வேட் அவர்களுக்கும் அவரது மனைவி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இவ் வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏனையோரும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் அவரது பிரிவைத் தாங்க முடியாத தகப்பன், தாயார், மைத்துனன் S. ஜெயானந்தம், சகோதரிகள் யசிந்தா, செல்வமணி, மருமக்கள் குகன், குயின்ரன், குலேந்திரன், குமுதினி, ஜீவானந்தன், ஜீவலோசனி, குமாரசாமி, குடும்பத்தினர் ஆசையம்மா, மகன்மார், க. கருணாநிதி. சாந்தகுமாரு, கேசவகுமாரு, சிவகுமார், அவரின் உயிர் நண்பனும் நவரட்டின ராஜா, மன்னர் நண்பர்களும் மற்றும் மச்சான்மார், சகோதரிமாரும், மைத்துனி. R. குமாரு மற்றும் ஏனையோரும் அவர் மோட்சத்தில் இருக்கும் வண்ணம் யேசுவை பிரார்த்திக்கின்றனர். தாய் அன்பின் செல்வ மகனே நீர் இருக்கும் சோலையிலே என்னைக் கூப்பிட்டு அணைத்திடு ஐயா மைத்துனன் ஆசையம்மா, சகோதரிமார் நீர் இல்லாமல் செல்வமே எங்கள் வலதுகை இல்லையப்பா என்றும் நீர் மோட்சத்தில் இருப்பீராக. 18-2-80 அவரது ஆத்தும சாந்தி ஆராதனைகள் பிற்பகல் 4 மணிக்கு பிப்பிலி சேமக்காலையில் நடைபெறும். அவரது மைத்துனன் இல்லத்தில் மத்தியானம் கிரிகைகள் நடைபெறும். அவரின் நண்பர்கள் உற்றார் உறவினர்கள் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்,

இங்ஙனம்
எஸ். ஜெயானந்தம்
சுராஜ் லேன்,
சுதுமலை
மானிப்பாய். 4952

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைக்குப் பொறியிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரினால் 1980 பெப்பிரவரி 29ம் திகதி மு. ப. 11-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

முதற்தர மரத்தில் கிராதி வேலை - 1000 சதுர அடி.

கடித உறையின் இடது பக்கமேல்மூலையில்,

''கிராதி வேலைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.

1980 பெப்பிரவரி 15ம் திகதி தொடக்கம் 1980 பெப்பிரவரி 29ம் தேதி நண்பகல் 12-00 மணிவரை வழக்கமான வேலைநேரங்களில் கேள்விப் படிவங்களின் தொகுதி இணைப்படியில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளரின் (நிருவாகம்) அலுவலகத்தில் வழங்கப்படும். இதற்கு மீளளிக்கப்படும் வைப்பாக 100/- ரூபாவும் மீளளிக்கப்படாத வைப்பாக 25/- ரூபாவும் செலுத்தப்படல்வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 25,000/- ரூபாவுக்குக் குறையாத வேலையைத் திருப்திகரமாகப் பூர்த்திமைக்கான சான்றை அளிக்கும் ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது வேறு எந்தவொரு பல்கலைக்கழகத்தின் தச்சு நிருமாண வேலையைச் செய்வதற்காகப் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

வேறு தேவையான விபரங்களை நேரடியாக உதவிப் பதிவாளர் (நிருவாகம்) அலுவலகத்தில் வழமையான வேலை நேரங்களிற் பெற்றுக் கொள்ளமுடியும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்-
இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1980-02-11.

## யாழ். நகர மக்கள் கடை

(அரியாலை)

வடபகுதி விற்பனைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மக்கள் கடைகளில் யாழ். பெரிய கடைப்பகுதியில் இருக்கும் மக்கள் கடையிலே நாளாந்தம் அதிக விற்பனை நடைபெறுகிறது.

இக்கடையில் விற்பனை செய்யப்படும் காய் கறி வகைகள் பெருமளவில் முற்பகலில் விற்பனையாகி விடுவதால் பிற்பகல் வேளையில் இக்கடையில் காய் கறிவகைகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அத்துடன் போதியளவு ஊழியர்களும் இங்கு பணியாற்றுவதினால் பாவனையாளர்கள் பொருட்களை வாங்குவதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது எனப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

......

## மட்டக்களப்பு சிவானந்தா தரமுயர்கிறது

(மட்டுக்களப்பு)

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் விரைவில் மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படவுள்ளது.

இவ்வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டு தொழில்நுட்ப வசதிகளும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஏற்பாடு கனிஷ்ட கல்வியமைச்சு மேற் கொண்டுவருகின்றது. இதனை தரமுயர்த்தித்தருமாறு மட்டக்களப்பு மாவட்ட மந்திரி திரு. எம். கனகரத்தினம், மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை ஆகியோர் கல்வியமைச்சரைக் கேட்டிருந்தனர். (அ)

## நெசவு நிலையம் புனரமைப்பு

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத் தொகுதியில் புயலால் சேதமடைந்த பழுகாமம் நெசவு நிலையம் ஒரு வருட இடைவெளியின் பின்பு செயல்படத் தொடங்கிவிட்டது. இந்நெசவு நிலையம் 50 ஆயிரம் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இதற்கானநிதியை நெட்பாஹ் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

......

## ''புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் அமரர் பாலா''

(மாவிட்டபுரம்)

''ஆசிரிய சங்கங்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தவர் அமரர் பாலசுப்பிரமணியம்'' என்று கீரிமலையில் அண்மையில் நிர்வாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய அஞ்சலிக்கூட்டத்தில் பேசிய சங்க வடபிரதேச பிரசாரச் செயலாளர் கனக. மகேந்திரா குறிப்பிட்டார். தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக்கிளைத் தலைவர், திரு. சி. நடராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது; பல்வேறு சங்கங்களாகப் பிரிந்து நின்று தமது உரிமைகளை வென்றெடுக்கமுடியாமல் தத்தளித்த தமிழ் ஆசிரிய சங்கங்களை ஒரே கொடியின் கீழ் கொண்டு வந்து ஆசிரியர் களது சங்கத்தைப் பலம் வாய்ந்ததாக ஆக்கியவர் அமரர் பாலா. அரசாங்கத்தையே கிலி கொள்ள வைத்தவர் அவர். தமிழர் ஆசிரியர் சங்கத்தை உலக ஆசிரியர் சம்மேளனத்தில் இணைத்துத் தமிழ் ஆசிரியர்களது குரல் உலக அரங்கில் ஒலிக்க வழி வகுத்தவர்: அவரது மறைவு ஈடு செய்ய முடியாதது'' என்றார். மேற்படி சங்க நிதிச்செயலாளர் திரு. நா. நடராசா உட்பட மற்றும் பலரும் அஞ்சலியுரையாற்றினர்.

# கீரிமலை நகுலேஸ்வரர் ரதோற்சவம் இன்று

(கீரிமலை)

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலயத் தேர்த் திருவிழா இன்றாகும். காலை 8 மணி பஞ்சமூர்த்திகள் இரதத்திற்கு எழுந்தருளி மங்கல வாத்தியங்களுடன் வீதியுலா வருவர். பிற்பகல் 4 மணிக்கு விசேஷ ஆராதனையின் பின், சுவாமி திருநடனத்துடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளுவார். இரவு இரதாரோகண பிராயச்சித் தாபிஷேகமும், ஜோதிலிங்கத்திற்கு மஹாநியாசஅர்ச்சனையும், நான்கு ஜாம அபிஷேகமும், சிவராத்திரி உற்சவமும் நிகழும்.

நாளை வெள்ளி உதயம் சமுத்திரத் தீர்த்தம், பிற்பகல் 4 மணிக்கு மூர்த்திகள் விசேஷ அலங்காரத்துடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளல், மஹாயாக அபிஷேகமும், திருவூஞ்சலும், துவஜ அவரோகணமும், சண்டிகேஸ்வரர் உற்சவமும் ஆசாரிய உற்சவமும் நிகழும்.

இரு தினங்களும் அன்னதானம் வழங்கப்படும்.

ஞாயிறு: பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

அடியார்களுக்கு விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## விபுலாநந்த வித்தியாலயம்

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத்தொகுதியிலுள்ள திருப்பழுகாமம் விபுலாநந்தர் வித்தியாலயத்தில் புதிய பாடசாலைக் கட்டிடத்திற்கென அத்திபாரக்கல் கடந்தவாரம் நாட்டப்பட்டது.

புயலின் தாக்கத்தை சமாளிக்கக் கூடிய இக்கட்டிடம் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் நவீன முறையில் அமைக்கப்பெறுகிறது. இதற்கான நிதியை நோர்வே நிறுவனம் வழங்கியுள்ளது. (அ)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23ம் திகதி நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. எம். வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இப்பொதுக் கூட்டத்தில் பிரதமவிருந்தினராக உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் கலந்து கொள்வார்.

## விசர்நாய் தொல்லை அதிகரிப்பு

(நெல்லியடி)

நெல்லியடிப் பட்டினசபைக்குட்பட்ட கலட்டி, கரணவாய் பகுதிகளில் விசர்நாய்கள் தொல்லை அதிகரித்து வருவதாக, உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கத்தின் கவனத்திற்கு, பொதுமக்களால் கொண்டுவரப்பட்டுள்ளது. (க)

## நிர்வாகிகள்

(நீர்வேலி)

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றத்தின் புதுவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு: தலைவர்: செ.சபாரத்தினம், உப தலைவர்கள்: எஸ். செல்லப்பா, க. மயில்வாகனம், செயலாளர்: கு. சோதிலிங்கம் உபசெயலாளர்: க. தணிகாசலம், பொருளாளர்: போல் சண்முகம்.

விளையாட்டுத்துறையை விரிவுபடுத்தும் நோக்குடன் விளையாட்டுத் துறைப்பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

# அறிவித்தல்

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் படித்து D. A. M. அரசாங்கப் பரீட்சையில் சித்தியடைந்த சகல பட்டதாரிகட்கும் வைத்தியப் பதிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிக் காரியாலயத்தில் 27-02-80ம் திகதி நடைபெறும் என்று அரச ஆயுர்வேத ஆணையாளர் எமக்கு அறிவித்துள்ளார். D. A. M. பரீட்சையில் சித்தியடைந்தும் பதிவு பெறாத பட்டதாரிகள் சகலரும் 27 - 2 - 80-ம் திகதி சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

டாக்டர் கே. எஸ். பரமசோதிநாதர்
நிர்வாக அதிகாரி

4960

# நன்றி நவிலலும் - அந்தியேட்டி அழைப்பும்

திரு. கதிரவேலு இரத்தினம்

தோற்றம்: 20 10-1910
மறைவு: 16 1-1980

கடந்த 16-1-1980-ம் திகதியில் சிவபதமெய்திய எமது அன்பின் தெய்வம் திரு. கதிரவேலு இரத்தினம் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கட்கும் மற்றும் பலவிதத்தில் உதவியவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 15-2--1980 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டியில் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தார்.

''இரத்தினா''
12/7, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

4951

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இம்சைக்கு ஓர் எல்லையுண்டு, அது தோல்வி அடையும். அகிம்சை எல்லையை அறியாது; அதற்கு என்றுமே தோல்வி இல்லை.

-மகாத்மா காந்தி

## மக்கள் கருத்து

## அமரர் ஜி. ஜி. நினைவுக் கட்டுரை

அமரர் ஜி. ஜி.யின் நினைவு தினத்தையொட்டி "ஈழநாட்டில்" வெளியான கட்டுரையைப்பற்றி காரைநகரைச் சேர்ந்த திரு. கு. குமாரதேவன் "ஈழநாடு" மக்கள் கருத்தில் அவரை எந்தவொரு தமிழனும் காங்கிரஸ்வாதியாக நோக்கவில்லையென்று 11-2-80 ல் தெரிவித்திருந்தார். அமரர் ஜி. ஜி ஆரம்பகாலம் தொடக்கம் இறக்கும்வரை தமிழ்க்காங்கிரசின் தலைவராக இருந்தார் என்பது அரசியல் அறிந்த யாவரும் அறிந்தமையே.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டபின் அமரர் ஜி. ஜி. தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் சார்பில் தொகுதி நிர்ணயக் கமிஷன்முன் சாட்சியமளித்தார். கூட்டணிக் குழுவில் சாட்சியமளிக்கச் செல்லவில்லை.

வட்டுக்கோட்டையில் நடந்த கூட்டணி மகாநாட்டிலோ அல்லது கூட்டணிப் பொதுக் கூட்டங்களிலோ, செயற்குழுக் கூட்டங்களிலோ அமரர் ஜி. ஜி. கலந்துகொண்டதில்லை. எல்லாவற்றுக்கும்மேலாக வட்டுக்கோட்டை மகாநாட்டில் ஜி. ஜி.யின் பெயர் கூட்டுத் தலைமைக்குப் பிரேரிக்கப்பட்ட பொழுது அன்று அதை திரு. அமிர்தலிங்கம் வன்மையாக எதிர்த்தார்.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் உயிரோடு இருந்த சமயத்தில் தெரிவு செய்யப்பட்ட கூட்டணியின் அபேட்சகர் நியமனக் குழுவில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் இடம் பெறவில்லை.

ஆதலால் அவர் கடைசிவரை தமிழ்க்காங்கிரஸ் தலைவராகவே இருந்தார்.

திரு. குமாரதேவன் கூறியபடி அவர் கூட்டணியின் தலைவராக வட்டுக்கோட்டை மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்டாரென்பது உண்மையெனில் கூட்டணியினர் இதுவரை அமரர் ஜி. ஜி.யின் நினைவாக ஏதாவதொரு ஞாபகச்சின்னம் நிறுவியுள்ளனரா?

அமரர் ஜி. ஜி.யின் இறுதி ஊர்வலத்தைக் கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் திரைப்படமாக்கினார். ஆனால் இன்றுவரை அது வெளியிடப்படாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்டது ஏன்?

தமிழ் மக்களுக்கு ஒரு மனதான தலைமையும், இயக்கமும் இருக்குமானால் அமரர் ஜி. ஜி.யின் நினைவு தினத்தைக் கொண்டாடுவதனால் அது பாதிக்கப்படாது.

இன்னும் கட்டுரைகளைப் பிரசுரிக்கக் கூடாது என திரு. குமாரதேவன் தெரிவிப்பது மிக வேடிக்கையாக இருக்கின்றது. ஏனெனில், பேச்சுச் சுதந்திரத்தையும் எழுத்துச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் அளவுக்கு ஜனநாயகம் எமது நாட்டில் இன்னும் செத்துவிடவில்லை.

அமரர் ஜி. ஜி.யின் நாமம் வாழ்க.

**சி. சுப்பிரமணியம்**
நாமகள் ஒழுங்கை,
கொக்குவில்.

# அர்ச்சனையால்ஆதரித்துசிவனைஇன்று இன்பக்கடலில் மூழ்கச் செய்வோம்

சிவனுக்கு மிகவும் விருப்பமான திதியே சிவராத்திரி என்று அழைக்கப்படும் திதியாகும். இதனைச் 'சிவனே-கைலாசத்தில் உமைக்கு நாதரே-உமக்குரிய சிறப்பான திதி எது' என்று வினவிய போது 'மாசி மாதத்து வரும் கிருஷ்ணபட்சத்துப் பதின்னான்காம் நாளிரவுச் சிவராத்திரி திதியே எனக்குமிகவும் பிடித்தமானதிதி. அன்று பக்தர்கள் விரதம், அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை நைவேத்தியம் போன்றவற்றால் என்னை இன்பக்கடலில் ஆழ்த்துவர்' என்று கூறுவதுடன் நான்கு ஜமாப் பூசை முறைகளையும் விளக்கி விரத பயனையும் எடுத்துக் கூறினார். பின்னர் உமை உலகோர்க்கு விளக்கியதாக நம்பப்படுகிறது.

இன்று இந்துக்களால் சிவாலயங்களில் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது சிவசிவராத்திரி ஐவகையாக மகாசிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாதசிவராத்திரிஎன்று கூறப்படுகிறது. மாசித்திங்கள் சதுர்த்தசியுடன் கூடிய நாளே மகாசிவராத்திரி, இத்தினத்தன்றைய முதலாம் ஜமாப்பூசையில் பஞ்சகவ்விய அபிசேகம், வில்வம் சாற்றப்பட்டு தாமரை மலரால் அர்ச்சனை, பயற்றம் பருப்புக்கலந்த பொங்கல் நைவேத்தியம், ரிக்வேத மந்திர ஜெபம், முதலியன இடம்பெறும், இரண்டாம் ஜாமம் சஞ்சாமிருத அபிசேகம், சந்தனதாமரை சாற்றித் துளசியால் அர்ச்சனை, பாயாச நிவேதனம், யசுர்வேத மந்திர உச்சாடனம் நடைபெறும், மூன்றும் ஜாமம் தேன் அபிசேகம், பச்சைக் கற்பூரம் ஜாதிமுல்லை சாற்றி முக்கிளை வில்வ அர்ச்சனை எள் அன்ன நிவேதனம், சாமவேத மந்திரமோதல் இடம்பெறும் நான்காம் ஜாமம் கருப்பம் சாற்றால் அபிசேகம், அரைத்த குங்குமப்பூவுடன் நந்தியார் வட்டை மலர்சாற்றி நீலோற்பல மலரால் அர்ச்சனை, சுத்த அன்ன நிவேதனம், அதர்வ வேத மந்திர மோதல் முதலியன இடம்பெறும். இவ்வாறாக நான்கு ஜாமமும் நித்திரை விளித்து பஞ்சாட்சரம், சிவ தாண்டவ தோத்திரம் முதலியன ஓதிச் சிவனைப் பக்திசிரத்தையுடன் வணங்குவோர் இம்மையிற் சிறந்த இன்பங்களையும் மறுமையில் உயர்ந்த பேறுகளையும் பெறுவர் என்று ஆகமங்கள் சாற்றுகின்றன. இருபத்துநான்கு வருடம் தொடர்ந்து இவ்விரதமனுட்டித்து விரதத்தை முடிப்போர் முத்தியடைவதுடன் அவர்களது மூவேழு தலைமுறையினரும் முத்தியெய்துவர் என்று நம்பப்படுகிறது இவ்விரதமனுட்டித்து சூரியன், முருகப் பெருமான், மன்மதன், இயமன், இந்திரன், அக்கினி, போன்றோர் வரங்கள் பல பெற்றனர். விரதச் சிறப்பை சிவாகம புராணம், ஸ்காந்த புராணம், பிரமோத்திரகாண்டம், வாதுள ஆகமம், போன்றன எடுத்துக்கூறுகின்றன.

பிரமா, விஷ்ணு சிவனது அடிமுடி தேடிய புராணக் கதையின் பின்னணியில் சிவராத்திரிதினம் தொடர்புபடுத்தப்படுகிறது. பிரமா, விஷ்ணு இருவரும் தாமே பெரியவர்கள் என்று அகங்காரம் கொண்ட சமயம் சிவன் அவர்கள்முன் சோதிவடிவில் தோன்றித் தனது அடியையும், முடியையும் தேடச்செய்து தனது பெருமையையும் அவர்களது சிறுமையையும் ஒருங்கே வெளிப்படுத்தி அவர்களது அறியாமையை நீக்கி அருள் கொடுத்த இரவே இவ்விரவாகச் சிறப்பிக்கப்படுகிறது. சோதிவடிவம் குளிர்ந்த நிலையே இலிங்கவடிவம், சிவனது சிறந்த அருவுருவத்திருமேனி, இவ்வடிவத்தில் மும்மூர்த்திகளும் இருப்பதாக நம்பப் படுகிறது. ஆண்குறி வழிபாடு என்று இதனை மேனாட்டார் கூறுவர், படைப்புத் தத்துவத்தை இவ்வடிவம் விளக்கினாலும் இது ஆண்குறி வழிபாடு அல்ல, ஆவுடையார் சக்தியையும், பாணம் சிவத்தையும் பீடம் கிரியா சக்தியையும் லிங்கம் ஞானசக்தியையும் பீட அடிப்பாகம் பிரம்மரூபம், நடுப்பாகம் விஷ்ணுரூபம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன.

இலிங்கத்தினின்று வெளிப்பட்ட வடிவமே இலிங்கோற்பவமூர்த்தி, சிவாலயங்களின் மேற்குப் பக்கத்து மாடச் சுவர்களில் இம்மூர்த்தியைக் காணலாம். இங்கே அண்ட வடிவினதான லிங்கத்திலிருந்து அடியும் முடியும் தெரியாத நிலையில் சிவனது வடிவமும் இடப்பாகத்தில் பிரமாவைக் குறிக்க பன்றி உருவமும் வலப்புறம் விஷ்ணுவைக் குறிக்க அன்னமும் சிருட்டிக்கப்பட்டு இலிங்கத்திலிருந்து சிவனது வடிவம் வெளிப்படுவதுபோன்ற காட்சியை இவ்வடிவம் காட்டும், சிவராத்திரி அன்று இலிங்கோற்ப வடிவத்திற்குச் சிறப்பான பூசை நடைபெறும் சோழ அரசன் இராஜசிம்மன் காலத்திலேயே முதல் முதல் ஆலயங்களில் இவ்வடிவம் தாபிக்கப்பட்டது. இவ்வடிவம் அறியாமையை அகற்றி அருளைக் கொடுக்கும் தத்துவத்தை உணர்த்துகிறது. இவ்வடிவம் எடுக்கப்பட்ட திதி இச் சிவராத்திரி திதி, ஆகவே இத்திதியும் இதே தத்துவத்தை எமக்கு உணர்த்துகிறது.

இலிங்கோற்பவ வடிவத்தைப் பாடுவதன் மூலம் சிவனது பெருமையை எடுத்துக் கூறி ஆன்மாக்களது சிறுமையை நினைவு கூரச் செய்து அருளைப் பெறும் வழியை மக்களுக்குச் சாட்டியதுடன் சைவ நெறியே மேலானநெறி என்று நிலைநாட்டிய பெருமை நாயன்மார்களுக்குரியது. ஞானசம்பந்தர் தமது ஒவ்வொரு பதிகத்தின் ஒன்பதாம் பாடலிலும் சுந்தரர் தமது பாடல்களில் முப்பத்தியேழு இடங்களிலும் அப்பர் இலிங்க புராணக் குறுந்தொகையிலும் இலிங்கோற்ப வடிவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் சிவனது பெருமையை நிலைநாட்டி விஷ்ணு, பிரமாவின் சிறுமையை காட்டி, சைவ சமயமே மேலானது என்று நிலைநாட்டினர். ஆகவே நாமும் ஆகமங்கள் கூறும் முறையில் விரதமனுட்டித்து எமது சிறுமையை நினைந்து அகங்காரம் நீங்கி ஆண்டவனை அன்போடு வணங்கி அருள் பெற்றுய்வோமாக.

**- தமிழரசி சந்திரசேகரம் -**
(உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

# கேதீச்சரத்தானை பூஜித்து உய்வோம்

"மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆதியன முறையாய் அமைந்து திருவருள்காட்டி நிற்பது திருக்கேதீஸ்வரம். தேவர்கள் இத்தலத்தில் அர்த்தசாமப் பூசை செய்துமகிழ்ந்தனரென்ற செய்தியை அறிய முடிகின்றது. கேதுவால் பூசிக்கப்பட்ட தலமாகையால் இது கேதீச்சரமெனப் பெயர் பெற்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக இத்தலம் பெருமை பெற்றுவிளங்கிற்று என்று பல கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இத்தலத்தின் பெருமையினை 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த, பெரிய புராணம் பாடிய சேக்கிழார் பெருமானலும், எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த நால்வரில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய அருளடியார்களின் திருப்பதிகங்களாலும் ஐயந்திரிபறத் தெளிந்துணர்ந்து கொள்ளமுடிகின்றது.

நமது ஈழத் திருநாட்டின் தவப்புதல்வரும், ஐந்தாம் குரவரென அழைக்கப்பட்டவருமான ஆறுமுக நாவலர் பெருமானார் இத்தலத்தை ஒரு தேன்பொந்தென்றும், உலகுவாழ் சைவப்பெருமக்கள் இதனைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று உளமார விளக்கிக் கூறினார்.

பல்வகைப்பட்ட ஆட்சியாளர்களின் இன்னலுக்கெல்லாமகப்பட்டுப் பலமுறை சிதைவுண்ட இத்திருத்தலம் காலத்துக்குக் காலம் புதிதாக அமைக்கப்பட்டிருந்தமை வரலாற்றுண்மை. இயற்கையின் சீற்றத்தால் மண் மாரிபெய்து மறைந்த நிலையிலிருந்த திருக்கோவில், நகரத்தாராலும், பசுபதிச்செட்டியார் பரம்பரையினராலும் ஈழத்துச் சைவப் பெருமக்களின் விடாமுயற்சியாலும் இன்றைய தோற்றத்தை எட்டிப்பிடித்துள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

**- து. உமாபதிசிவம் -**
(தலைவர், மகாசிவராத்திரி தண்ணீர்ப்பந்தல் சபை. டபிரதேசப்போக்குவரத்துச் சபை, மன்னார்)

### சிவ சிந்தனை

தன்னுட்டம் நீங்கத் தவங்கிடக்கும் மெய்யன்பர்
தன்னுட்டந் தானே தனதாக்குந்- தன்னுட்டங்
கண்டோர் வழிபேணிக் கற்றுநிற் பார்தமக்கே
எண்டோளார் காட்டும் எழில்.

அஞ்சக் கரத்தானை ஆதிமுதலானை
நெஞ்சக் கருத்துள் நிறைவானை- நெஞ்சுள்ளே
நீள நினைந்துருகி நேய நிறையலரத்
தாளதுவே கொள்ளல் தலை.

தானேயாந் தத்துவனே தற்பரனே சிற்பரனே
நானேயாந் தத்துவத்தின் நாயகனே- நானேயாய்
நீநிற்கை யாமறியோம் நீநிற்கை யானன்றி
நீநிற்கை யாரறிவார் நேர்.

-ச. தங்கமாமயிலோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை ஆதீனத்தில் இன்று

# பிரேமானந்தாஜி

## உற்பத்திலிங்க பூஜை

நல்லை ஆதீனத்தில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் மாத்தளை சுவாமி பிரேமானந்தாஜியின் அற்புத லிங்கோற்பவ வைபவத்துடனும், சைவபரிபாலன சபையினரின் பஜனைகளுடனும் நான்கு சாமப் பூசைகள் நடைபெறும்.

இளமையில் பள்ளிப் படிப்பில் சிந்தனைசெல்லாத பிரேமானந்தாஜி, ஆத்மீக சிந்தனைக்குரிய முயற்சிகளிலே ஈடுபட்டார். அற்புதங்கள் நிழ்த்துமளவிற்கு நண்பர்களாலும், அடியார்களாலும் மனதில் நீங்கா இடம்பெற்றுள்ளார். பெற்றோரால் தண்டிக்கப்பட்டுப் பல கட்டுப்பாடுகளுக்கு ஆட்பட்ட சுவாமிஜி அவற்றினால் துன்பப்பட்டாரல்லர். பதினான்கு வயதில் வீட்டை விட்டு வெளியேறி, மாத்தளையில் கொட்டுவாகெதர என்னும் இடத்தில் தனிமையில் இருந்து சித்துக்கள் பலவற்றைச் செய்தார்.

சுவாமிஜியின் சித்துக்கள் பலவற்றினாலும் கவரப்பட்ட மக்கள் அவரது பக்தர்களாயினர். சுவாமிஜிக்கு பதினைந்தாவது வயதில் சிவராத்திரி தினத்தன்று சடும் வயிற்றுவலி ஏற்பட்டு, ஒரு சிவலிங்கத்தையும் உற்பத்தியாக்கி வெளிப்படுத்தினார். அச்சிவலிங்கத்திற்கு அன்று முதல் இன்றுவரை ஒவ்வொரு சிவராத்திரி தினமும் லிங்கோற்பவ வைபவம் நடாத்திவரு

(7-ம் பக்கம் பார்க்க)

## "ஈழநாடு" (இந்திய தேர்தல்) தேர்தல்போட்டி சிறப்பிதழ்

# இவர்கள் பரிசு பெறுகின்றனர்கள்!



1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15



16 17 18 19 20 21 22

# உற்சாகமாக நடைபெற்ற ஒரு தேர்தல் போட்டி

இந்திய பாராளுமன்றத்துக்கான (லோகசபை) இடைக்காலத் தேர்தலையொட்டி 'ஈழநாடு'பத்திரிகை நடத்திய தேர்தல் போட்டியில் கலந்து கொண்டவர்கள் - பலநூறு பேர் என்று சொல்வதிலும் பார்க்க, சில ஆயிரம் என்று சொன்னால் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்க ஏராளமான வாசகர்கள் கலந்துகொண்டு தேர்தல் போட்டி சம்பந்தமான நடுவர் குழுவினரைத் திக்குமுக்காடச் செய்துவிட்டனர்.

நடுவர் குழு முன்னிலையில் தேர்தல்பெட்டி உடைக்கப் பட்டபோது நடுவர்களே திகைத்துவிட்டனர். அத்தனை கூப்பன்கள்! 'ஈழநாடு' மீது அத்தனை ஆதரவு!

### நடுவர் குழுவினர்

போட்டி சம்பந்தமான நடுவர் குழுவில் வர்த்தக வங்கி (யாழ். கிளை) மனேஜர் திரு. எஸ். வைத்தியநாதன், த பினுன்ஸ் கம்பெனி (யாழ். கிளை) விற்பனை முகாமையாளர் திரு. பி. சிவயோகசுந்தரம், எஸ். சின்னத்துரை அன் பிறதர் (யாழ். கிளை) ஸ்தாபனத்தின் பிரதம கணக்காளர் திரு. சி. கே. பிரகாசம், 'ஈழநாடு' ஸ்தாபன பொதுமுகாமையாளர் திரு. து. சீனிவாசகம் மற்றும் 'ஈழநாடு' ஸ்தாபன இயக்குநர், உதவிப் பொது முகாமையாளர், 'ஈழநாடு' ஆசிரியர் குழுவினர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

### முழுதும் சரியாக ஒருவர் மட்டும்

குவிந்து கிடந்த கூப்பன்களை ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்தபோது ஒருவர்மட்டுமே நான்கு கேள்விகளுக்கும் சரியான விடை எழுதியிருந்தார்! தரம் பிரித்து பரிசீலனை செய்த நடுவர் குழுவினருக்கு இது பெரும் ஆச்சரியத்தையும், பெருமளவு திருப்தியையும் அளித்திருந்தது.

''முதலாம் பரிசுக்குரியவர் எப்படியோ திருப்திகரமான முறையில்தெரிவுசெய்யப்பட்டு

-- மகான் --

விட்டார்'' என்று ஆறுதல் அடைந்த நடுவர் குழுவினர் தரம் தரமாகப் பிரிக்கப்பட்ட ஏனைய விடைகளின்மீது கவனத்தைத் திருப்பியபோது சரியாக இருவர் மட்டும் மிக நெருங்கிய விடையை எழுதியிருந்தனர். இது அடுத்து ஏற்படுத்திய ஆச்சரியம்!

மூன்று பரிசுக்குரியவர்களு வெற்றிகரமாகத் தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து இருபத்தேழு ஆறுதல் பரிசு பெறுவோரைத் தெரிவுசெய்யும் அடுத்த படலம் ஆரம்பமாயிற்று.

நாம் கேட்ட நான்கு கேள்விகளில் மூன்றுகேள்விகளுக்கும் சரியான விடை எழுதி ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்களின் தொகை என்ன என்ற கேள்விக்குரிய விடையுடன் மிகவும் நெருக்கமாக ஒத்துப்போகக் கூடிய விடைகள் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு அவற்றில் அதிர்ஷ்டசாலிகளாக இருபத்தேழு பேர் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

### உங்களின் ஊகம்

போட்டிக் கூப்பன்களில் 99 சத விகிதத்தினர் இரண்டு விஷயங்களைத் தெளிவாக ஊகப்படுத்தியிருந்தனர். ஒன்று, தனிக்கட்சி அரசு; மற்றையது பிரதமர் திருமதி இந்திராகாந்தி என்பதாகும். இதற்காக போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு ஒரு சபாஷ் போடுகின்றோம்!

புதிய பிரதமர் யார் என்ற கேள்விக்கு விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் என்றும், சிலர் ஜெகஜீவன்ராம் என்றும பதிலளித்திருந்தனர்.

எழுபது சதவீதத்தி , தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு. கழகம்தான் கூடுதல் ஸ்தானங்கள் பெறும் என்று விடை

(5-ம் பக்கம் பார்க்க)

### ★ ஆறுதல் பரிசு பெறுவோர்

முதல் மூன்று பரிசுகளையும் தவிர்த்து ஆறுதல் பரிசுகளாக நாம் வழங்கும் இருபத்தேழு பரிசுகளையும் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர்களும் இவர்களுக்கு யார் என்ன பரிசு வழங்குகின்றனர்கள் என்ற விபரமும் இங்கு தருகின்றோம்.

இங்கு வெளியாகியுள்ள புகைப்படங்களுக்குக் கீழே இடம் பெற்றுள்ள இலக்கத்தின்படி அதிர்ஷ்டசாலிகள் பெயர் விபரம் வருமாறு:-

(3) தி. மாணிக்கவாசகர், உசனை வளவு, தும்பளை.

(4) சு. பத்மநாதன், பண்டாரக்குளம் வீதி, நல்லூர்.

(5) ப. ரவீந்திரநாதன், பண்டாரக்குளம் வீதி, நல்லூர்.

(6) க. வேலுப்பிள்ளை, தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம்.

(7) க. சச்சிதானந்தன், அராலி வடக்கு, [illegible] வட்டுக்கோட்டை.

(8) பூ. சந்திரகாந்தா, முருகேசர் வீதி, நல்லூர்.

(9) ஈ. கமலாவதி, முதலியார் மகேசன் வீதி, நவாலி.

(10) [illegible] வீதி, கந்தர்மடம்.

(6-ம் பக்கம் பார்க்க)

### பரிசுகள் வழங்குவோர்

1. எஸ். சுலைமான் கண்டு அன்ட் பிறதர்ஸ் - மின்னியக்க சவரக்கருவி, 2. டில்கா வாச் வேர்க்ஸ் - மேசைமணிக்கூடு, 3. நியூவிக்ரேர்ஸ் - வானொலி, 4. எரோ எலெக்றிக்கல்ஸ் - மின் கல்கியூலேட்டர், 5. ரவர் கோப்பி பார் - ஆறு எவர்சில்வர் கோப்பைகள், 6. தாமோதரவிலாஸ் - மின்சார ஸ்திரிக்கை, 7. நியூட்டோன் எலக்றிக்கல்ஸ் - மின்அடுப்பு, 8. எம்மோ ஸன்ஸ் : மின்மேசைவிளக்கு, (9) அண்ணா கோப்பி - வெள்ளித் தட்டு, 10. மலேசியன் றெக்கோடிங் சேர்விஸ் - பாடல்கள் பதிவுபெற்ற மூன்று கசெற்றுகள், 11. விமாகி - தேநீர் செற், 12. முகமதலி அப்துலலி - வெள்ளித் தட்டம், 13. கணேசன் ஸ்டோர்ஸ் - சிங்கப்பூர் நைலக்ஸ் சேலை, 14 பாரத் ஸ்ரூடியோ - பெரிய அளவிலான வெளிநாட்டு 'அல்பம்' 15. கல்பனாஸ்- சிங்கப்பூர் நைலக்ஸ்சேலை, 16. செ. சிவபாதலிங்கம் - ஒரு சோடி குத்துவிளக்கு 17. றிமைன் டெயிலறிங் மார்ட் - 80×20 ஷேர்ட் 18 ஜெஸிமா பிக்ஸர் பலஸ் - குளியலறைக் கண்ணாடி 19. எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் - நூறு ரூபா ரொக்கப் பணம், 20. கிருபா கிவ்ற் ஹவுஸ் - பெறுமதி வாய்ந்த பரிசுப் பொட்டலம், 21. நாதன் ஸ்டோர்ஸ்-நூறு ரூபா ரொக்கப் பணம், 22. ஆ. க. கனகசபாபதி அன்ட் சன்ஸ்-நூறுரூபா ரொக்கப்பணம், 23. கே. என். எம். மீரான் சாஹிப் - எவர் சில்வர் பாத்திரங்கள், 24. வி. கே. ராஜரத்தினம் - மின்சார மேசை விளக்கு, 25. மலாயன் றேடியோ சேர்விஸ் - மின்சார மேசை விளக்கு, 26. செ. சண்முகராஜா பிறதர்ஸ் - மூன்று டின்கள் மோல்டாவா, 27. வைஸ்வே ஏஜன்ஸீஸ் - ஒரு சோடி குத்து விளக்கு.

# பரிசுபெறுவோர்

இந்தியப் பாராளுமன்றத்துக்கான இடைக்காலத் தேர்தலையொட்டி கடந்த மாதம் முதல் வாரத்தில் ''ஈழநாடு'' பத்திரிகை நடத்திய தேர்தல் போட்டியில் முதல்பரிசு பெறும் அதிர்ஷ்டசாலியின்பெயர்:

● தி. ராமசகங்ரன் 'சிவசக்தி' க. க. எஸ். , இணுவில், சுன்னாகம்

இவரது புகைப்படத்தின் இலக்கம் ஒன்று.

இரண்டாது பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

● நா கா. குமாரசூரியர், நயினாதீவு-2.

இவரது புகைப்படத்தின் இலக்கம் இரண்டு.

மூன்றுவது பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

● வ, கந்தையா. மே பா, பேரின்பநாயகம், வாசிகசாலையடி, புங்குடுதீவு.

இவர்தமது புகைப்படத்தை அனுப்பாததினால் இவரது படம் இங்குஇடம் பெறவில்லை

**1-ம் பரிசு:**

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலிருக்கும் த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட் வழங்கும் ஐநூறு ரூபா பெறுமதியான சேமிப்பு முதலீட்டு வவுச்சர் அல்லது அவர்களின் சந்தைப் படுத்தும் பகுதியில் ஐநூறு ரூபாவுக்குப் பெறுமதியான பொருள்கள். இவற்றில் ஒன்றைப்பெற்றுக் கொள்ளலாம்.

**2-ம் பரிசு**

பிரபல வர்த்தகர்களான எஸ். சின்னத்துரை அன் பி

(5ம் பக்கம் பார்க்க)

### பரிசு பெற்றோர் கவனத்துக்கு!

'ஈழநாடு' பத்திரிகை நடத்திய இந்தியத் தேர்தல் போட்டியில் வெற்றி பெற்ற அனைவரும் எதிர்வரும் சனிக்கிழமை 16-ம் திகதி மாலை நான்கு மணிக்கு 'ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து தங்களது பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

நேரில் சமுகமளிக்கும்போது தங்களை உறுதிப் படுத்தும்வகையில் அடையாள அட்டை கொண்டுவருவது விரும்பத்தக்கது.

16ம் திகதி மாலை 4 மணிக்கும் 5 மணிக்குமிடையே தமக்குரிய பரிசுப் பொருளை பெற்றுச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆறுதல் பரிசுபெறும் இருபத்தேழு பேருக்கும் இருபத்தேழு கவர்ச்சிகரமான பரிசுகள் காத்திருக்கின்றன. வரிசைக்கிரமமாக, அதிர்ஷ்ட ரீதியில் உங்களுக்குரிய பரிசுகள் தெரிவுசெய்யப்பட்டு, வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எமது வாழ்த்துக்கள்!
உங்கள் மனதுக்கினிய பாடல்களையும், இசைக் கச்சேரிகளையும் ஒலிப்பதிவு செய்துகொள்ளவும், உங்கள் நாளாந்தத் தேவையான நவநாகரிகப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்,
மற்றும் சைக்கிள்கள் றேடியோக்கள் விற்பனைக்குண்டு
லிடோர் சென்ரர்
02, J. M. C. பில்டிங்
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்!
சைக்கிள் மற்றும் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கு
யாழ்ப்பாணத்தில் தன்னிகரற்ற ஸ்தாபனம்
சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்
24. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்த்துக்கள்!

ஹொண்டா மற்றும் 'றீகொண்டிசன்' மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு

C. D 125 மொடல் C. 90 சுப்பர் கப் மொடல்.
தொடர்பு கொள்க:

**காந்த மோட்டேர்ஸ்**

54, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8240

"ஈழநாடு"வுக்கும் அதிர்ஷ்டசாலிகளுக்கும்

எமது வாழ்த்துக்கள்!

அலுமினியம், இனமல் பொருள்கள்,
பான்ஸி பொருள்கள்,
பிளாஸ்ரிக் பொருள்கள்,
அழகான கூந்தல் முடிகள், குடை,
விளையாட்டுப் பொருள்கள்,
நாடக ஒப்பனைப் பொருள்கள்

ஆகியவற்றுக்கு

சிறந்த ஸ்தாபனம்

**எஸ். சவரிமுத்து**

73, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆறுதல்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

(11) ஹ. சுரேஷ், பழம் வீதி, சந்தர்மடம்.
(12) ஜேம்ஸ், க. ஜீவானந்தம், அட்டன் நெஷனல் வங்கி, யாழ்ப்பாணம்.
(13) க. தவலிங்கரத்தினம், கோப்பாய் வடக்கு.
(14) பா. சுஜேந்திரா, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(15) பா. ஆனந்தலட்சுமி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(16) இ. பெருமாள், காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.
(17) ந. சண்முகதாசன், சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.
(18) வே. வனிதா, சரவணை மேற்கு, வேலணை.
(19) டிலிப்குமார் மேதர், பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
(20) செ. நாகரத்தினம், ஆறும் வட்டாரம், மண்டைதீவு.
(21) ஜீவநேசன், UP VI D பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(22) தா. எ. மல்க்கம், பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

### படங்கள் அனுப்பவில்லை

இவர்கள் தவிர, புகைப் படங்கள் தங்கள் கைவசமில்லை என்று அறிவித்த (ஆறுதல், பரிசு பெறும்) ஏழு அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் வருமாறு:-
(23) எஸ். எச். சேதுகாவலர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(24) வி. கே. முருகேசு, கண்டி வீதி, கிளிநொச்சி.
(25) சு. ஆனந்தகுமாரசாமி, இளவாலை வடக்கு, இளவாலை.
(26) த. யமுனாராணி, ஆடியபாத வீதி, நல்லூர்.
(27) வே. இராஜேஸ்வரி, சரவணை மேற்கு, வேலணை.
(28) வ. கந்தையா, வாசிகசாலையடி, புங்குடுதீவு.
(29) செ. குலசேகரன், மே/பா. த. பா. செல்வராசா, மஞ்சந்தொடுவாய், காத்தான்குடி, மட்டக்களப்பு.

## உற்சாகமாக நடைபெற்ற...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதியிருந்தனர். அத்தனை பேரினது உளகமும் பிழைத்து விட்டதே!

### பொருத்தமான அம்சங்கள்

அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சிறப்பு அம்சங்களைக் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்!

நல்லூரிலிருந்து தந்தையும், மைந்தனும், கந்தர்மடத்திலிருந்து இரண்டு சகோதரர்களும், பிறவுண் ரோட்டிலிருந்து ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும், சரவணை மேற்கில் ஒரேயிடத்திலிருந்து இரு சகோதரிகளும் ஆறுதல் பரிசுகள் பெற்றிருப்பது எத்தனை பொருத்தம்!

இது மட்டுமல்ல; அரச ஊழியர்கள், வங்கி ஊழியர், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர், இளைஞர்கள், சற்று வயது முதிர்ந்தவர்கள்..

இப்படியாகப் பல ரகத்தினரும் இப்போட்டியில் மிகவும் உற்சாகமாகக் கலந்துகொண்டுள்ளனர்! நினைத்தாலே இனிக்கிறது!

### அனைவருக்கும் நன்றி

இந்தியத் தேர்தலையொட்டி 'ஈழநாடு' பத்திரிகை நடத்திய தேர்தல் போட்டியில் மிகவும் உற்சாகமாக நாம் போட்ட 'கணக்கை'யே விஞ்சிவிடும் வகையில் எம்மைத் திக்குமுக்காடச் செய்யும் விதத்தில் கலந்து கொண்ட வாசகர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறும் அதே நேரத்தில் பரிசுகளைத் தாராளமாக அள்ளி வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

### நடுவர் குழுவினர்

நடுவர் குழுவினராகக் கடமையாற்றியவர்கள் உயர் அதிகாரிகள். ஒவ்வொரு நிமிடத்தையும் பொன்னுக மதிப்பவர்கள். நேரத்தையும் பொருட்படுத்தாது ஒரு சொந்தக் குடும்பம்போல, சரியான நேரத்துக்குச் சமுகமளித்து, நீண்ட நேரம் வரை பொறுமையுடன் கூப்பன்களைப் பரிசீலனை செய்த நடுவர் குழுவினருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

## பரிசு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்ஸ் (கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) ஸ்தாபனத்தார் முந்நூறு ரூபா ரொக்கப்பரிசு வழங்குகின்றார்கள்.

### 3-ம் பரிசு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள கே. கே. வி. யாழ்ப்பாண நகை மாளிகை ஸ்தாபனத்தாரும், யாழ். ஸ்டான்லிவீதியிலுள்ள கல்கிசன்ஸ் ஸ்தாபனத்தாரும் இணைந்துமுந்நூறு ரூபா ரொக்கப் பரிசு வழங்குகின்றனர்.

## இன்று புங்குடுதீவில் எதிர்க்கட்சித் தலைவர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இருபிட்டி ஐங்கரன் இளைஞர் மன்றத்தினரின் இரண்டாவது ஆண்டு விழா இன்று வியாழக்கிழமை இரவு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய முன்றலில் மன்றத்தலைவர் திரு. நு. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாச்சிமார்கோவிலடி ஜெயராமன் குழுவினரின் மேளவாத்தியக் கச்சேரியுடன் ஆரம்பமாகவுள்ள இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், காவலூர் எம். பி. திரு. கா. பொ. இரத்தினம். சட்டத்தரணி திரு. எஸ். மகேந்திரன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர்.

கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறவுள்ளன.

தேர்தல் போட்டி நடத்திய "ஈழநாடு"வுக்கும் பரிசு பெறுவோருக்கும்

எமது வாழ்த்துக்கள் !

**TOSHIBA** - Audio Equipments, Television receivers, & Vidio Products.

**SHARP** - Audio equipments, House Appliances.

**OREX** - Sound Systems & Television receivers.

உங்கள் பிரச்னை என்ன ? பாடல்கள் பதிவு செய்ய (றெக்கோடிங்) வேண்டுமா ? வானொலி திருத்த வேண்டுமா? புத்தம் புதிய வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிக வாங்கள் வேண்டுமா?

'கசற்' மற்றும் சகலவிதமான பெருள்களும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

**ERO ELECTRONICS**

23, நவீன சந்தை, -!- யாழ்ப்பாணம்.

(வேலைத்தலம் - இல. 1, நவீன சந்தை)

தேர்தல் போட்டியில் பரிசு பெறுவோருக்கு

எமது வாழ்த்துக்கள்!

பாவிக்கப்பட்ட வெஸ்பா என்ஜின்கள், ஸ்கூட்டர்கள், 7 தொன் பி. எம். சி. (BMC) லொறி, A 60, BMC, பெர்க்கின்ஸ், லேலண்ட், இஸஇஸஇ, L/D5 6 சிலிண்டர், 4 சிலிண்டர் டீசல் என்ஜின்கள் ஆகியன விற்பனைக்கு உண்டு

புதிய ஹொண்டா 200CC, 125CC, 110CC மோட்டார் சைக்கிள்களும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரயாணிகள் செல்லும் வான்கள், பொருள்கள் ஏற்றிச்செல்லும் வான்கள், இஸஇஸஇ, பெட்போட் ரிப்பர், லொறி மற்றும் பாவிக்கப்பட்ட டீசல் வாகனங்களும் ஓடர் மீது பெற்றுக்கொள்ளலாம்.

**A. V. M. & Co.,**

167, ஆஸ்பத்திரி வீதி,
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "போர் வெறியைத் தூண்டுகிறார் கார்ட்டர்"
### எட்வர்ட் கென்னடி சாடுகிறார்

வாஷிங்டன், பெப். 13
"அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் உலக நாடுகளிடையே போர் வெறியைத்தூண்டுகிறார். அதுவே அவரது கொள்கையாக இருக்கிறது.

சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பையும் தரு. கார்ட்டரே வரவழைக்கிறார். இவ்வாறு கூறுகிறார் அமெரிக்க செனட்டர் திரு. எட்வேர்ட் கென்னடி. ஆப்கான் நெருக்கடி தொடர்பாக அமெரிக்க அதிபர் எடுத்துவரும் நடவடிக்கையைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கார்ட்டர் தேசாபிமானத்தின் உயர்தரபோதகராகத் தம்மைக் காட்டிக் கொள்கிறார் என்றும் திரு. கென்னடி தெரிவித்துள்ளார். (இ)

---

எண்ணை உற்பத்தி நாடுகளைப் பாதுகாக்க

# தரையிலும் கடலிலும் இயங்கும் அமெரிக்க படைப்பிரிவு அரபுக்கடலுக்குச்செல்கிறது

## 20 யுத்தக்கப்பல்களுடன் இணையும்
### ஓமான், சோமாலியா, கென்யா படைத்தளமாகும்?

வாஷிங்டன், பெப். 13
பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் உள்ள எண்ணை உற்பத்தி நாடுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக தரையிலும், கடலிலும் இயங்கக்கூடிய அமெரிக்க கடற்படைப் பிரிவு ஒன்றை ஜனாதிபதி கார்ட்டர் அரபுக் கடலுக்கு அனுப்புகிறார்.

எண்ணை உற்பத்தி நாடுகளுக்கு எதிராக சோவியத் யூனியன் மேற்கொள்ளக் கூடிய எந்த ஒரு நடவடிக்கையையும் முறியடிக்கும் விதத்திலேயே 1800 வீரர்களைக் கொண்ட இப் படைப்பிரிவு இன்னும் ஓரிரு தினங்களில் அரபுக்கடலுக்குச் சென்றுவிடும் என்று அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'ஒகினவா', 'மொபைல்', 'அலாமோ', 'பெனுடிஞே' ஆகிய நான்கு தரையிலும் கடலிலும் இயங்கக்கூடிய போர்க்கப்பல்களைக்கொண்ட கடற்படைப் பிரிவே அரபுக் கடலுக்குச் செல்கிறது.

ஹெலிகொப்டர்கள், தாங்கிகள், பீரங்கிகள், தாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், தரையிலும் நீரிலும் இயங்கக் கூடிய வாகனங்களையும் உடக்கிய இக் கப்பல்கள் காலவரையறையின்றி அரபுக் கடலில் தங்கி நிற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே அரபுக்கடலில் நிலைகொண்டிருக்கும் 20 யுத்தக் கப்பல்களுடன் புதிதாகச் செல்லும் நான்கு கப்பல்களும் இணைந்துகொள்ளும் என்றும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் பலாத்காரத்தைப் பயன்படுத்தவும் இப் படைகள் தயங்காதுஎன்றும் அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் இந்தப் படைப்பிரிவுகள், ஓமான், கென்யா, சோமாலியா ஆகிய நாடுகளில்உள்ள விமானத்தளங்களையும் துறைமுகங்களையும் உபயோகிக்கக் கூடியவிதத்தில்அந்தந்தநாட்டு அரசுகளிடம் தற்காலிகமாக அனுமதிபெறப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ)

---

கார்ட்டரின் பகிஷ்கரிப்புக் கோரிக்கை நிராகரிப்பு

# 'ஒலிம்பிக்ஸ்-80' திட்டப்படி சோவியத்யூனியனில் நடக்கும்
### சர்வதேசக்குழு ஏகமனதாக தீர்மானம்

நியுயோர்க், பெப். 13
மாஸ்கோவில் இவ்வாண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிக்குமாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் விடுத்த வேண்டுகோளை சர்வதேச ஒலிம்பிக் குழு ஏகமனதாக நிராகரித்துள்ளது.

இவ்வாறு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் கிலானின் பிரபு தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவில் அங்கம்வகிக்கும் 73 நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டம் நேற்று நியுயோர்க்கில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

ஒலிம்பிக்போட்டிகள் திட்டமிட்ட நாட்களில் சோவியத் யூனியனிலேயே நடைபெறும் என்றும் சர்வதேசக்குழு ஏகமனதாகத் தீர்மானித்ததுஎன்றும் கிலான்பிரபு தெரிவித்தார். (இ)

---

## எம். ஜி. ஆர். அரசுக்கு 21 ஹரிஜன எம். எல். ஏக்கள் ஆதரவு

சென்னை, பெப். 13
தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்த ஹரிஜன சட்டசபை உறுப்பினர்கள் மது அ. தி. மு. கவுக்கான ஆதரவு தொடர்ந்தும் இருக்கும் என தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் ஹரிஜனர்கள் நடத்தப்படும் முறை குறித்து அண்மையில் தமிழக அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்த ஹரிஜன நலத்துறை அமைச்சர் திரு. சௌந்தர பாண்டியன் தெரிவித்த குற்றச்சாட்டுக்களையும் இந்த உறுப்பினர்கள் மறுத்தனர்.

ஹரிஜன சட்டசபை உறுப்பினர்கள் 20 பேர் அ. தி. மு. க. விலிருந்து விரைவில் விலகுவர் என திரு. சௌந்தரபாண்டியன் தெரிவித்துள்ளமை [illegible] இந்த உறுப்பினர்கள் கண்டித்தனர். (இ)

---

## தமிழக சட்டசபைக்குள் துண்டுப்பிரசுரம்

சென்னை, பெப். 13
தமிழக சட்டசபை பார்வையாளர் கலரியிலிருந்துகொண்டு கோஷமிட்டு சபைக்குள் துண்டுப்பிரசுரங்களைவீசிய இளைஞர்களான செல்வம், அபரேந்திரன் ஜோசப் ஆகிய மூவருக்கும் சட்டசபை 7 நாள் சடுங்காவல் தண்டனை விதித்தது. (இ)

---

## பொது விடுமுறை

சென்னை, பெப் 13
இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை சூரியகிரகணம் நிகழ்வதை ஒட்டி தமிழக அரசு அன்றைய தினத்தை பொது விடுமுறையாகப் பிரகடனப்படுத்தியுளது. (இ)

---

## மகாநாடு
(உடுப்பிட்டி)

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க வருடாந்த மகாநாடு எதிர் வரும் மே மாதம் 10ம் திகதி நடைபெறவுள்ளது.

இம் மகாநாடு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும். (அ)

---

அயத்தொல்லாஉத்தரவிட்டால்மட்டுமே

## பணயக்கைதிகள் அரசிடம் ஒப்படைக்கப்படுவர்
### மாணவர்கள் உறுதி

தெஹ்ரான், பெப். 13
ஈரானிய சமயத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி உத்தரவிட்டால் மட்டுமே அமெரிக்க பணயக்கைதிகளை ஈரானிய அரசிடம் தாம் ஒப்படைக்க வுள்ளதாக பணயக்கைதிகளுக்குப் பொறுப்பாக உள்ள மாணவர்கள் தெரிவித்தனர்.

இன்னும் ஒருசில தினங்களில் அமெரிக்கப் பணயக்கைதிகளை ஈரானிய அரசு பொறுப்பேற்கும் என ஜனாதிபதி திரு. பாணிசதார் தெரிவித்ததை அடுத்தே மாணவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

பணயக்கைதிகளை அரசிடம் ஒப்படைக்குமாறு அயத்தொல்லா கொமெய்னி உத்தரவிடமாட்டார் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர். (இ)

---

## 70-ம் ஆண்டுகளில் 421 அணு சோதனைகள் நடந்தன
### சுவீடன் பிரதிநிதி கண்டனம்

ஜெனிவா, பெப். 13
70ம்ஆண்டுகளில் உலகநாடுகளிடையே 421 அணுஆயுத பரிசோதனைகள்இடம்பெற்றுள்ளன.

இத்தகவலை ஜெனிவாவில் நடைபெறும் ஆயுத பரிகரண மகா நாட்டில் உரையாற்றிய சுவீடன் பிரதிநிதி திருமதி தோஷ்யன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இக் காலப் பகுதியில் சோவியத் யூனியன் ஆகக் கூடுலான அணுசோதனைகளை நடாத்தியுள்ளது. நிலத்துக்கடியில் சோவியத் யூனியன் 191 சோதனைகளையும் அமெரிக்கா 154 சோதனைகளையும் பிரான்ஸ்

(7-ம் பக்கம் பார்க்க)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க: பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!

Mel Ads

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவராத்திரியன்று
நள்ளிரவுக் காட்சி உண்டு
**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - பத்மினி
**அரசிளங்குமரி**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவராத்திரியை முன்னிட்டு
இன்று நள்ளிரவுக்
காட்சியுண்டு
ஜெய்சங்கர் - லக்ஷ்மி நடித்த
**பெண் தெய்வம்**
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
**Fury at Smugglers Bay**
(Color)
Form: 15-2-80 ONE FLEW OVER THE CUKOO'S NEST

கடைசி வாரம்
**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
**தேவதாஸ்**
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

சிவராத்திரியை முன்னிட்டு இன்று நள்ளிரவுக் காட்சியுண்டு
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
முத்துராமன் - ஸ்ரீவித்யா - சுந்தரராஜன்
**காலங்களில் அவள் வசந்தம்**

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
தேசிய பூங்காவில்... மரணபயம் ஏற்படும் அதிர்ச்சி!
பதினெட்டடி உயரமும் சுமார் 2 ஆயிரம் இருத்தல் எடையும் கொண்ட 'கிறிஷ்லி' என்னும் இராட்சச விலங்கு மனிதனைப் புசிக்கவிருக்கும் பயங்கரம்!
ஐயோ! இப்பொழுது யாழ். நகரிலுமா?
**"GRIZZLY"**
HORROR! TERROR!! SUSPENSE!!! Scope-Color-
- More Suitable For Adults -
சிவபூசையில் கரடி புகுந்தமாதிரி --பழமொழி
'கிறிஷ்லி'-கரடிச் சித்திரம் இன்று நள்ளிரவுக் காட்சியுமுண்டு

இன்று சிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவு 12-30
மணிக்கு விசேட காட்சியுண்டு
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி நடித்த
**ஆலயமணி** (புத்தம்புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
**தெய்வ மகன்**

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவராத்திரியை முன்னிட்டு இன்றுநள்ளிரவுக்காட்சி உண்டு
சிவாஜி - சௌகார் ஜானகி
**மகாகவி காளிதாஸ்**

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
That "Walking Tall" man is back!
Joe Dow Baker is back As Rugged Hero
in
**FRAMED**
(Adults only)
Coming Soon: **BADGE 373**

# இன்றைய பலன்

*மாசிமாதம் 2-ம் திகதி (14-2-1980) வியாழக்கிழமை*

மேடம்; சுற்றுவட்டத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். கடமையிலும் கண்ணியம் பிறக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

இடபம்;- வெற்றிஉமது அருகில் விரைந்து வரும், எதிர்த்தவர்களே ஆதரவு தருவார்கள், கனிவானதினம்.

மிதுனம்:- எதிர்பார்த்த இடத்திலும் தடைகள் ஏற்பட்டுவரும், நண்பர்களின் நச்சரிப்பு அதிகரிக்கும், அவசர போக்கைத் தவிர்க்கவும்.

கடகம்:- பொன்னான சந்தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச் செய்யும். தேடிய சிந்தை உங்களை நாடியேவரும். கடமையில் சிறப்புமுண்டு.

சிங்கம்:- அரச பயத்திற்கு இடமுண்டு, வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும், தொழில் புரியுமிடத்தில் கவனஞ் செலுத்தவும்.

கன்னி:- உறவினர் சகாயமுண்டு உத்தியோக சிறப்புமுண்டு, பெற்றோர்வழி ஆதரவுமுண்டு, தெய்வவழிபாடு பேலோங்கும்.

துலாம்:- தன்மானமிகுதிக்கும் தனவரவிற்குமிடமுண்டு, சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமும் மேற்கொள்ளப்படலாம், கல்வியிலும் முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்:- மனச்சுமை நீங்கும், பிறரின் ஆதரவு கிடைக்கும், வரவிலும் திருப்தி காணும், கண்ணியமான நாள்.

தனுசு:- பணம் பறிபோவதற்கு இடமுண்டு, தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றும். கல்வியிலும் மந்த நிலை காணப்படும்.

மகரம்:- மனக்கவலைகளுக்கு இடமளிக்கும், வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்க்கவும், சிலருக்கு உடல் நலனும் பாதிக்கப்படலாம்.

கும்பம்;- வாழ்க்கையில் ஏற்படும் திடீர்த்திருப்பம் திரவியலாபத்தைக் கொண்டுவரலாம், புதிய தொழில்களிலும் மனம் நாடும்.

மீனம்:- அமைதிக்குப் பங்கம் ஏற்படும். சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்குமிடமேற்படும், தொழிலும் நஷ்டமடையும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வேலுப்பிள்ளை**

## மட்டுநகரில் இலங்கை வங்கிக் கிளைகள்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை வங்கி ஐந்து கிளைகளை விரைவில் ஆரம்பிப்பதற்காக உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருப்போர் பெருகிவருவதனால் இக்கிளைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தற்போது மட்டக்களப்பில்மட்டும்தான் ஒரு கிளை உள்ளது.

புதிய கிளைகள் மட்டக்களப்புத் தொகுதியில் ஏறுவூர், காத்தான்குடி, கல்குடா தொகுதியில் செங்கலடி, வாழைச்சேனை, பட்டிருப்புத் தொகுதியில் களுவாஞ்சிக்குடியில் அமைகின்றன.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவராத்திரியையொட்டி
1-30 நள்ளிரவுகாட்சியுண்டு
ஆனந்தன்-E.V. சரோஜா
அசோகன்
**வீரத்திருமகன்**
(புதிய பிரதி)

# 2-ம் நாள் ஆசிரியர் மறியல்: 2000 பேர் கைது

சென்னை, பெப்.13

தமிழகத்தில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற ஆசிரியர்கள் மறியல் போராட்டத்தின்போது 2 ஆயிரம் ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

தமிழக சட்டமேல்சபை உறுப்பினர் திரு. கே. அறிவமுகன் மற்றும் 76 ஆசிரியைகள் உட்பட 350 ஆசிரியர்கள் சென்னை தலைமைச் செயலகத்திற்கும் முன்னால் மறியல் செய்தபோது கைது செய்யப்பட்டனர்.

முதலாவது நாள் மறியலின்போது 1600 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. (இ)

# சட்டவிரோதக்குடியேற்றம்: பிரிட்டன் நாடு கடத்துகிறது

லண்டன், பெப். 13

பிரிட்டனில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அங்குள்ள உள்நாட்டு அலுவலகத்தில் கம்ப்யூட்டர் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

விஸா காலாவதியான பின்னரும் பிரிட்டனில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளையும் பிரித்தானிய அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என நிரூபிக்கப்படுபவர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு உடனடியாக நாடு கடத்தப்படுகின்றனர். (இ)

## 70-ம் ...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சீனு, பிரிட்ன் ஆகிய நாடுகள் முறையே 50, 15, 05, இந்தியா ஒரு சோதனையையும் நடத்தியுள்ளது.

இந்தநூற்றுண்டில் எற்படும் என அஞ்சப்படும் அணுஆயுதப் போரைத் தவிர்க்க வேண்டுமாயின் உடன் ஆயுத பரிகரண ஒப்பந்தம் ஒன்றை வல்லரசுகள் மேற்கொள்ள வேண்டும். (இ)

## கேதீச்சர...

(3-பக்கத் தொடர்ச்சி)

இத்திருத்தலத்தில் அமைந்துள்ள சோமாஸ்கந்த மூர்த்தியின் அளவினை; அமைப்பினை, அழகினை யாம் எங்கும் காண முடியாத சிறப்பினையுடையது. உலகின் பலபாகங்களிலும் இருந்து தினமும் இவ்வாலயத்துக்கு வந்துவணங்கும் அடியார்களின் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இத்திருத்தலத்திற்கு வருகைதரும் அடியார்கட்கு குடிநீர், போக்குவரத்து சுகாதாரம் ஆகிய குறைபாடுகள் உண்டு. குடிநீர் வசதியினை குடிநீர் வழங்கற்சபை வெகுதுரிதமாக நிறைவேற்றி வருகிறது. பலபாகங்களிலுமிருந்து இத்திருப்பதிக்கு வரும் அடியார்களுக்கு போக்குவரத்து வசதிகளை அளிப்பதுடன் குறுகிய காலச் சேவையைச் செய்யும் பணியையும் மன்னார் போக்குவரத்துச்சபையும் வடபிரதேச சபையும் செய்து வருகின்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபை நெறியான சேவையை ஆற்றுவதுடன் விழாக்காலங்களில் அடியார்களின் தாகந்தீர்க்க தண்ணீர்ப்பந்தலும் அமைத்து வருடாவருடம் நல்லறம் செய்துவருவது உலகறிந்த உண்மையாகும்.

இ போ சபை மன்னார் டிப்போவையும், வடபிரதேச சபையின் ஏனைய டிப்போக்களையும் சேர்ந்த சகலதரஊழியர்களும்; கொழும்பு மற்றும் ஏனைய பகுதியைச் சேர்ந்த வர்த்தகப் பெருமக்களும், ஆதரவாளர்களும் வழங்கி வரும் பொருளுதவிமூலமும், நிதியுதவி மூலமும் விழாக்காலங்களில் இத்திருத்தலத்திற்கு வரும் அடியார்களுக்கு வருடாவருடம் தண்ணீர்ப்பந்தல் அமைத்துத் தாகந்தீர்க்கத் தண்ணீர் வழங்கிவருகிறோம். இப்பணிக்கென வருடாவருடம் நியமிக்கப்படும் மகாசிவராத்திரி தண்ணீர்ப்பந்தல் சபை தனது பொறுப்பைஉணர்ந்து சிறந்தமுறையில் சேவையாற்றிவருவது பாராட்டுக்குரியதாகும். இதற்கெனத் தம்மை அர்ப்பணித்து உழைக்கும் சகலருக்கும் எமது நன்றி உரியதாகும்.

# திருமலை மாஜி நகரத்தலைவரிடம் விளக்கம்

(திருகோணமலை)

உப்புவெளிக் கிராமத்திற்கு மின் விநியோகம் வழங்குவது சம்பந்தமாகத் தனிப்பட்ட நிறுவனமொன்றுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு கணக்காளர் நாயகம் திருகோணமலை முன்னாள் நகரசபைத் தலைவர் திரு. வி. வெற்றிவேலுவிடம் கேட்டுள்ளார்.

திருகோணமலை நகரசபையின் விசேட ஆணையாளராக திரு. வெற்றிவேலு இருந்த பொழுதே இந்தமின்விநியோக விஸ்தரிப்புக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. (வெ(

## நல்லை ஆதீன...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார். சர்வமத சாந்திநிலையம் என்ற பெயரில் மாத்தளையில் கடந்த பத்து வருடங்களாக, நிறுவன ரீதியாக வேறுபாடுகளைக் கடந்த நிலையில் சமய போதனைகளை நிகழ்த்தி வருகின்றார்.

சுவாமி பிரேமானந்தாஜியின் அருள் அற்புதங்களுள் விதந்து குறிப்பிடப்படும் நிகழ்ச்சியாக 'ஐம்பொன்னு லான கிருஷ்ணர் சிலை'யினைத் தோற்றுவித்துள்ளமையாகும் அந்நிகழ்ச்சியினைக் குறிப்பிட்ட அன்பர் பின்வருமாறு வர்ணிக்கின்றார்:

"1978 கிருஷ்ண ஜெயந்தி தினத்தன்று பக்தர்கள் மலர்களைச் சொரியும்போது மலர்க் குவியலில் தனது கையை விட்டு, 14 அங்குல உயரமும், 25 றுத்தல் நிறையுமுள்ள ஓர் அழகிய ஐம்பொன்னுலான சிலையொன்றை, மக்கள் அதிசயப்படும் வகையில் எடுத்தார். இச்சிலை 'பூபாலகிருஷ்ணன்' என்ற பெயர் சூட்டி அவருடைய மாத்தளை ஆச்சிரமத்தில் பக்தர்களின் வணக்கத்துக்கு வைக்கப்பட்டிருக்கிறது."

அதியற்புத மனிதராகத் திகழும் சுவாமி பிரேமானந்தாஜியின் லிங்கோற்பவ வைபவத்தில் கலந்து, இறையருளின் அற்புத விளக்கங்களையும், அருளாற்றலையும் பெற்றுய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்தி

ராணி மார்க் இந்தியா ஓடுகள்
மீண்டும் விற்பனைக்கு
வந்துவிட்டது,
தரம் மிக்க நீடித்த பாவனைக்கு
**ராணி மார்க் இந்திய ஓடுகளை**
வாங்கிப் பயனடையுங்கள்.
விபரங்கட்கு:
**லேடன் ரேடர்ஸ்,**
சேகரம் கட்டிடம்,
183/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 693


ஈழநாடு The EELANAADU 50 சதம்


## டாக்டர்கள் வேலைக்கு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)
யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று டாக்டர்கள் வழக்கம் போல் வேலைசெய்தார்கள்.

நேற்று முன்தினம் ஒரு நாள் லீவில் நின்ற டாக்டர்கள் நேற்று வேலைக்கு வந்திருந்தார்கள்.

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் நேற்று டாக்டர்கள் வழமைபோல் வேலை செய்தனர்.

நேற்று முன்தினம் ஆஸ்பத்திரி டாக்டர்களின் சுகவீனம் லீவு காரணமாக பெரும்பாலும் வேலைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. 40 டாக்டர்கள் பணிபுரியும் ஆஸ்பத்திரியில் 4 பேர் மாத்திரமே வேலைசெய்தனர்.

இந்தியா ஓடுகளுக்கு
தொடர்பு கொள்ளவும்.
லேடன் ரேடர்ஸ்,
யாழ்ப்பாணம்.


## பங்கீட்டு அட்டைக்கு மா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் உத்தரவு பெற்ற வியாபாரிகள் கடைகளிலும் ஒரு பங்கீட்டு அட்டைக்கு இரண்டேகால்றுத்தல் (ஒரு கிலோ) மா வழங்கப்படுகிறது. (க)

## பகிரங்கச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)
''ஆப்கானிஸ்தானும் சர்வதேச நிலைமையும்'' என்னும் பொருளில் இன்று வியாழன் மாலை 6 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி முன்பாக திரு. நா. சண்முகதாசன் சொற்பொழிவாற்றுவார். (நா)


வெளிவந்து விற்பனையாகிறது!

## கணித விஞ்ஞான தரவுகள்

(வாய்பாடுகள்)

O/L A/L மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் தேவையான கணித விஞ்ஞான வாய்பாடுகளையும் தரவுகளையும் உள்ளடக்கியது.

தொகுப்பாசிரியர்: V. நடேசபிள்ளை B.sc, Dip in ED

வெளியீடு:
**மாக்மிலன் புத்தகசாலை** யாழ்ப்பாணம்.
விலை ரூபா: 7/90 V. P, P. உண்டு
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தக சாலை
243· K. K. S. வீதி. யாழ்ப்பாணம்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
சாரதா, ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை
No. 2 A பஸ்நிலையம் யாழ்ப்பாணம்
கமலா அன்ட் பிறதர்ஸ்
நவீன சந்தை, பருத்தித்துறை.
யுனைட்டெட் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை
பருத்தித்துறை.
கலைக் கோட்டம்
பெரியகடை, மன்னர்.
விஜயலெட்சுமி புத்தகசாலை
248, காலி வீதி, கொழும்பு-6


## சிவராத்திரி விழாக்கள்

(யாழ்ப்பாணம்)
பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா சமித்தி இன்று மகாசிவராத்திரி தினம் அனுஷ்டிக்கிறது. திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்யசாயிசேவா மண்டபத்தில் விழா நடைபெறும்.

### துர்க்கா ஆலயத்தில்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் சிவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

### ஊரைதீவில்

(புங்குடுதீவு)
மகாசிவராத்திரியானஇன்று புங்குடுதீவு ஊரைதீவு பாணாவிடைசிவன் ஆலயத்தில் இரவு நான்கு சாமப் பூசைகளும் இடம் பெறவுள்ளன.

திரு. இ. பொன்னுத்துரையின் உபயத்தில் நிகழவிருக்கும் இப்பூசைகளின் போது விசேஷ பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (கொ)

### கோப்பாயில்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் தெற்கு வீரபத்திர சுவாமி கோயிலில் மகாசிவராத்திரி தினம் இன்று நடைபெறும்.

தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன் ''சிறுத்தொண்ட நாயனுர்'' என்னும் பொருள் பற்று கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். பண்டிதர் நீ. சி. முருகேசு ''அழுது ஞானம் உண்ட பிள்ளை'' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

### யாழ். வைத்திசாலையில்

(யாழ்ப்பாணம்)
யாழ்.அரசினர் வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் மகாசிவராத்திரி விழா வழமைபோல் இன்று நடைபெறுகிறது.

### கொழும்புத்துறையில்

(யாழ்ப்பாணம்)
கொழும்புத்துறை விநாயகமூர்த்திப்பிள்ளையார் கோவிலில் இன்று நடைபெறும் சிவராத்திரிவிழாவில் திரு. ஈழவேந்தன் தலைமையில் 'அருள் மொழி அரசி' வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ''பெண்சுமந்த பாகத்தன்'' என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார். திரு. பொன் சிவப்பிரகாசம் தலைமையில் திருமதி வேதவல்லி கந்தையா ''சிவராத்திரி மகிமை'' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

### அரியாலையில்

(யாழ்ப்பாணம்)
அரியாலை இந்துமகா மன்றத்தின் மகாசிவராத்திரி விழா அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று நடைபெறும்.

### வடகோவையில்

(யாழ்ப்பாணம்)
வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் மகாசிவராத்திரி விழா இன்று நடைபெறவிருக்கின்றது.

### ஸ்ரீசத்யசாயிபாபா சேவாநிலையத்தில்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மத்திய பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா சேவாநிலையத்தினரின் மகாசிவராத்திரி விழா இன்று ரசிகரஞ்சன சபாமண்டபத்தில் நடைபெறும்.

## கோர விபத்து

(மட்டக்களப்பு)
உழவுயந்திரம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கோரமாக மோதிக்கொண்டதில் படுகாயமடைந்த இருவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பட்டிருப்பில் ஒரதிவு என்ற இடத்தில் நடைபெற்ற இந்த விபத்தில் வி. சதாசிவம் ஆர். ராஜரத்தினம் ஆகியவர்களே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த ராஜரத்தினம் ஓரளவு குணமடைந்துள்ளார். உழவு யந்திரசாரதி பொலிசாரால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ஐவர்

(1-ம் பக்க தொடர்ச்சி)
அன்ரன் மெல்தாஸ் ராசகுமார் ஆகிய மூவரையும் கைது செய்தனர். இம் மூன்று சந்தேகநபர்களும் அடையாள அணிவகுப்புக்காக றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

5 சந்தேக நபர்களுக்குமான அடையாள அணிவகுப்பு நாளை நடைபெறவிருக்கிறது. (க)

## அவசிய சேவை


(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யப்படுகின்றது. டாக்டர்களது கோரிக்கைகளுக்குப் பரிகாரம்காணத்தக்க நல்லதொரு நிலைமையை ஏற்படுத்துவதற்கும், மாண்புமிகு ஜனாதிபதியை இவ்விடயம் சம்பந்தமாகத்தொடர்புகொள்வதற்குமாகவே டாக்டர்களது 'லீவு' நடவடிக்கை அமைந்தது என்றும் கருதுவதற்கிடமுண்டெனவும் தெரியவருகின்றது.

தற்பொழுது ஆஸ்பத்திரிகளில் வழமைபோலவே கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [நா]


பெற்றேல் விலை கூடிவிட்டதா? கவலைவேண்டாம்....இதோ வந்துவிட்டது...

SUZUKI

- குறைந்த எரிபொருட் செலவில் கூடிய தூரம் சொகுசான பயணத்தை சுஸுக்கி உங்களுக்கு வழங்குகின்றது.
- உங்கள் தேர்வுகளை எமது காட்சிச்சாலையில் பார்வையிடுங்கள்.
- SUZUKI - A 50 - 9100/-
  A 80 - 9750/-
  K 125 - 13800/-
  GP 125 - 14800/-
  Lambrette 150 DL - 11500/-
- உங்கள் தேவையை உறுதிப்படுத்த விரையுங்கள்




பணம் கட்டியதும் வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு உடன் கிடைக்கிறது,

சி. சின்னத்துரை அன் கொம்பனி
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7357

S. Sinnathurai & Co.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ர 14-ந் தி அ சி
Registere e t ener ce Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org